முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1187

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.12.2022**, வியாழக்கிழமை

1. பிரம்ம சூட்சும வேத ரகசியமே
பிரணவ சக்திமிகு ஞான மாதவமே
வரம்பல பெற்று இந்த கலியுகத்தை மீட்க
வள்ளலாக வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 14 ம் நாள் 29.12.2022, வியாழக்கிழமை)
வரம் தந்தேன் இன்னும் அரங்கன் உமக்கு
வல்லமை கூடி வந்த நோக்கம் வெற்றி கொள்ள
3. வெற்றி கொள்ள பரிபூரண ஆசி உண்டு
விரைந்து அரங்கன் நீ எழுந்து இந்த உலகத்தில்
ஆற்றல்பட ஞான படைகளை உருவாக்கி
அழியாமை என்கின்ற மகா வரத்தை அன்பர்களுக்கெல்லாம் வரமாக தந்து
4. தந்துமே இந்த கலியுகத்தின் அற்புதத்தை
தக்கபடி தரணி காக்கும் வண்ணம் இனிதே
சிந்தைபட உலகோர் சிந்தைக்குள் கலந்து
சித்தியாகி ஜெகத்தை மீட்கும் உயர் சக்தியாகி
5. ஆகியே அரங்கன் நீ வந்த நோக்கம்
ஆற்றல்பட நிறைவேறும் காலம் கனியஇருக்க
இருக்கவே கந்தவேலன் யான் கனிவுகொண்டு உந்தனுள்
முழுமைபட இணைந்து வந்தநோக்கம் பூர்த்தி கொள்ள வல்லமைபட ஞானம் அருளும்
6. அருளுவேன் அன்பர்கள் அனைவருக்கும்
இன்னும் அரங்கன் உன்பால் பற்றுகூடி
சிந்தைபட ஞானத் தலைவனென்றும்
சித்திமிகு கலியுகத்தின் உயர் ஞானி என்றும்
7. என்றுமே அன்பர்கள் உன்பால் இன்னும் பிடிப்பு கொண்டு
இணையில்லா அரங்கன் நீ வகுத்த தர்மத்தை
துன்பம் போக்க உலகமெங்கும் விரிவாகச் செய்து
துயர்வென்று உலகோர் யாவரும் உன்வழி
8. உன்வழி ஒன்றிணைந்து உயர்வாக வர
உற்றதுணையாய் ஆறுமுகன் யான் உயர் ஞானம் எங்கும் தருவேன்
தருவேன் அரங்கன் நீ வகுத்த தத்துவம் வழி தர்மத்தோடு அன்பர்கட்கு சன்மார்க்கத்தை
இன்பமோடு ஏற்க அருள் புரிந்து இனிதே ஆறுமுகன் யான் அற்புதம் நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–